**ஹெலிரூர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2022/2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹெலிரூர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எல்கேஏஎஸ் 7 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று காலப்பகுதியின் போதான காசுப்பாய்ச்சல்களை அறிக்கையிட வேண்டும். மீளாய்வாண்டின் இலாபத்தில் காசல்லாத கொடுக்கல்வாங்கலாக இருந்த ரூபா 100,000 ஏனைய வருமானம் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைமுறை ஆண்டு இலாபத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும். ஆனால் ரூபா 100,000 காசல்லாத ஏனைய வருமான கொடுக்கல்வாங்கல் காசுப்பாய்ச்சல் கூற்றில் இருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பு செய்யப்பட்ட ரூபா 348,646 தொகை முன்னைய ஆண்டுகளில் இருந்து நிலுவையாக இருந்த இந்த தொகைகளின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு சீர்செய்யப்பட்டிருந்தது. எனினும், அவதானிப்பின் பிரகாரம் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றும் சீர்செய்யப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | எல்கேஏஎஸ் இல. 10 இன் 08 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள், அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் ஏற்பட்ட சீர்செய்தல் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு நிறுவனம் அதன் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை சீர்செய்ய வேண்டும். எனினும், 2023 சனவரி 8 இல் ரூபா 990,000 தொகையான மீள்நிதியிடப்பட்ட சர்வதேச விமான பயணச்சீட்டு விற்பனைகள் மீளாய்வாண்டின் விற்பனை வருமானத்துடன் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022/23 நிதியாண்டுக்கான வருடாந்தக் கணக்குகள் முடிவடைந்த பின்னர் இந்த மீள்நிதியிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், எதிர்காலத்தில் எஸ்எல்ஏஎஸ் 10 இன் பிரகாரம் இந்த வகையான கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சீர்செய்தல் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதற்கு அதன் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சீர்செய்யப்பட வேண்டும். |
| (இ) | எல்கேஏஎஸ்-1 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம் தற்போதைய காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்துத் தொகைகளுக்கும் முன்னைய காலப்பகுதி தொடர்பாக நிறுவனம் ஒப்பீட்டுத் தகவலை வெளிப்படுத்த வேண்டும். எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இணைக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெலிரூர்ஸ் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் (HTTC) கற்கைநெறிக் கட்டணத்தின் ரூபா 1,755,000 தொகையான பெறவேண்டிய வருமானம் ரூபா 1,560,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள பெறவேண்டிய வருமானம் ரூபா 195,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கற்கைநெறி தொடங்கிய திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் இரண்டு மாணவர்கள் சேர்ந்துள்ளனர், எனவே, இந்த 03 மாதங்களுக்கான ரூபா 195,000.00 தொகையான கற்கைநெறிக் கட்டணம் பெறப்பட வேண்டியதாக கருதப்பட்டு, 2023 ஏப்ரல் மாதத்தில் கணக்குகளில் சீர்செய்யப்பட்டிருந்தது. | சரியான வருமானத் தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக முற்பணமாக பெறப்பட்ட வருமானம் ரூபா 388,750 ஆகும். எனினும், கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் இது ரூபா 291,250 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முற்பணமாக பெறப்பட்ட வருமானம் ரூபா 97,500 ஆல் | கற்கைநெறி (இல. 06) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குப் பின்னர் மாணவர் ஒருவர் கற்கைநெறியில் சேர்ந்தார். எனினும், 2022 செப்தெம்பரின் இறுதியில் அவர் முழு கற்கைநெறிக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தார். மாணவர் கற்கைநெறியில் பங்கேற்காத | வருமானம் சரியாகக் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | மாதங்களுக்கான வருமானம் 2023 ஏப்ரல் மாதத்தில் முற்செலுத்திய வருமானமாக இனங்காணப்பட்டு சீர்செய்யப்பட்டிருந்தது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 15 இன் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பிஈடி/எஸ்/எச்ரீ/1/12 (i) ஆம் இலக்க கடிதம் | அந்தக் கடிதத்தின் பிரகாரம் கம்பனியின் பங்குகளை திறைசேரிக்கு மாற்றுவதற்கும், கம்பனியின் சபைக்கு திறைசேரி உறுப்பினரை நியமிப்பதற்கும் பணிக்கப்பட்டது. எனினும், அந்த பணிப்புரையை கம்பனி பின்பற்றியிருக்கவில்லை. | 2022 ஒக்தோபர் 07 ஆம் திகதிய எம்ஓடி/பி&பி/01/35/ஏஎவ்(1) என்ற கடிதத்தின் மூலம் எம்ஓடி மூலம் திறைசேரியிலிருந்து பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு கோரப்பட்டது. எனினும், திறைசேரி நாளதுவரை கம்பனிக்கு பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்திருக்கவில்லை. | திறைசேரியில் இருந்து பணிப்பாளரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 2.3 ஆம் பிரிவு | கம்பனி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் வருடாந்த பாதீட்டையும் தயாரிக்க வேண்டும், ஆனால் 2022/2023 நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் கம்பனி அதன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டை தயாரிக்க முடியாமல் போனமை கால வரம்புகளாலாகும். எனினும் பொதுமுயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு இரண்டையும் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை கம்பனி உடனடியாக மேற்கொண்டுள்ளது. | வழிகாட்டல்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 8,377,098 தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7,920,739 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 456,359 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சர்வதேச விமான பயணச்சீட்டு விற்பனை வருமானம் மற்றும் நிதி வருமானம் அதிகரித்தமையே இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.